# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அநுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,919—1918 ம் ௵ தை௴ 11 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1898 ம் ஆண்டின் சுகாதாரசங்கக் கட்டளைச் சட்டம்.

1898 ம் ஆண்டின் சுகாதாரசங்கக் கட்டளைச்சட்டத்து 56 (7) ம் பிரிவின்கீழ் கேகாலைச் சுகாதாரசங்கத்தாரால் இயற்றப்பட்ட பின்வருந் துணைப்பிரமாணங்கள் உத்தம தேசாதிபதியவர்களால் அதிகாரமந்திரசபையாரின் ஆலோசனையோடு உறுதிப்படுத்தப்பட்டு இஃதால் அறிவித்தல் செய்யப்படுகின்றன.

உத்தமனுர் கட்டளைப்படி,

கொழும்பு, கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர், 1918 ம் ௵ தை௴ 7 ந் ௳.

ஆர். ஈ. ஸ்ற்றப்ஸ், கலோனியல் சக்கிறுத்தார்.

மேற்சொல்லிய துணைப்பிரமாணங்கள்.

சோடா லெமனேற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளும் செய்யும் இடங்களைப்பற்றிய துணைப்பிரமாணங்கள்.

1. கேகாலை சுகாதாரசங்க எல்லைக்குள் அச்சங்கத்தலைவருக்கு ஒரு மாசத்துக்குமுன் எழுத்துமூலமாக அறிவியாமல் ஒருவரும் விற்பனவுக்காக சோடா லெமனேற்றையும் அதைப்போன்ற மற்றக்குடிவகைகளையும் செய்யத்தொடங்கப்படாது.

2. எந்தவிதமான சாலையிலிருந்தாவது, அல்லது குதிரை லாயத்திலிருந்தாவது அல்லது மிருகங்களை இரவில் அல்லது பகலில் வைத்திருக்கும் வேறு கட்டிடத்திலிருந்தாவது, அல்லது எந்தவிதமான கக்கூசிலிருந்து அல்லது கக்கூசக் குளியிலிருந்தாவது, 150 அடிக்குள், சோடா லெமனேற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளும் செய்யப்படும் இடம் இருக்கப்பட்டாது. மேற்சொல்லிய குடிவகைகள் செய்யப்படும் இடத்தின் எந்தப் பகுதியாவது ஆட்கள் சீவிக்கிறதற்குப் பாவிக்கப்படாது.

3. சோடா லெமனேற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளும் செய்யப்படும் இடங்களும் அவைகளைச் சுற்றியிருக்கும் இடங்களும் நன்றாய் வெளிச்சம் வரக்கூடியதாயும், நன்றாய்க் காற்று வரக்கூடியதாயும், மரத்தால் சீலிங் போடப்பட்டதாயும், சீமேந்து நிலமுள்ளதாயும், அழுக்குகளைக் கழுவித் தள்ளக்கூடியதாய்ச் சாந்தால் கட்டப்பட்ட கான்களு முள்ளதாயும், இருத்தல்வேண்டும். அழுக்கு தூசி இல்லாமலும் துப்புரவாயும் அவ்விடங்களை வைத்திருத்தல் வேண்டும். இலையான் போகக்கூடாத பிறம்பான அறைக்குள் இனிப்புச் சாறுகள் செய்யப்படவேண்டும். மேற்சொல்லிய குடிவகைகள் செய்கிறதற்குப் பாவிக்கும் மருந்துச் சாமான்களும் மற்றுச் சாமான்களும் நல்லவைகளாயிருப்பதுமன்றி, அவைகளைச் செய்கிறதற்குப் பாவிக்கும் பாத்திரங்களும், இயந்திரங்களும், அதிக துப்புரவாய் வைக்கப்பட்டிருத்தல்வேண்டும்.

4. சங்கத்தலைவரின் அநுமதிபெற்றதும் அழுக்குப்படாது சரிவரப் பாதுகாக்கப்பட்டதுமான இடத்திலிருந்தே மேற்சொல்லிய குடிவகைகள் செய்கிறதற்காப் பாவிக்கப்படும் தண்ணீர் எடுக்கப்படவேண்டும். அவ்விடத்திலிருந்து வேலைத்தலத்துக்குக் கொண்டுபோகும் வழியில் தண்ணீர் அழுக்குப்படாத மாதிரியாயிருக்கவேண்டும். மேற்சொல்லிய குடிவகைகள் செய்கிறதற்காகப் பாவிக்கப்படும் இயந்திரங்களோடு சேர்த்துக்கட்டிய தூசிபோகாதபடி தடுக்கும் மூடிபோடப்பட்ட வக்குகளில் தண்ணீர் விடப்பட்டு வைத்திருத்தல் வேண்டும்.

5. சோடா லெமனேற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளும் செய்கிறதற்குப் பாவிக்கப்படும் முழுத் தண்ணீரும் "ஜியூவல்," என்ற வடிக்குள்ளால் அல்லது சங்கத்தலைவரா ஏற்கப்பட்ட வடிக்குள்ளால் வடித்தெடுத்தல் வேண்டும். மேற்சொல்லிய வடிகுத்திரங்களோடு சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். சங்கத்தால் ஏற்கப்பட்ட பிரசித்தமான இடத்திலிருந்து தண்ணீர் எடுக்கப்படுங் காலத்தில் மேற்சொல்லிய பிரமாணத்தை விலக்குதற்குச் சங்கத்தலைவர் அதிகாரமுடையராயிருப்பார்.

6. சங்கத்தின் எல்லைக்குள் செய்யப்பட்ட அல்லது வெளியிலிருந்துகொண்டு வரப்பட்ட சோடா லெமனேற்றையும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளையும் மனுஷர் குடிக்கிறதற்குத் தகுதியற்றதென்று சங்கத்தின் சக்கிடுத்தாரால்

அல்லது இன்ஸ்பெக்றரால் திருத்தியாகக் கண்டால், அவர் அந்தக் குடிவகையை யெடுத்து மெடிக்கல் ஆபிசருக்கு முன் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டுவந்த குடிவகை மனுஷர் குடிக்கிறதற்குத் தகுதியற்றதென்று அம் மெடிக்கல் ஆபிசருக்குக் காணப்பட்டால், அந்தக் குடிவகையை அழித்துப்போடும்படி அவர் கட்டளைப்பண்ணலாம். மனுஷர் குடிக்கிறதற்குத் தகுதியற்றதென்று கோட்டுக்குத் திருத்தியாய் அத்தாட்சிப்படுத்தப்பட்ட எந்தச் சோடா லெமனெற்றையும் அதைப் போன்ற மற்றக் குடிவகைகளையும் செய்கிறவர்கள் குற்றத்துக்குப் பாத்திரராவார்கள்.

7. சோடா லெமனெற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளும் செய்கிறதற்குப் பாவிக்கப்படும் எல்லாப் போத்தில்களும் வடிகட்டியெடுக்கப்பட்ட தண்ணீரினால் கழுவப்பட்டும் அதிக துப்புரவாய் வைக்கப்பட்டும் இருத்தல் வேண்டும்.

8. சோடா லெமனெற்றும் அதைப்போன்ற மற்றக் குடிவகைகளு மிருக்கிற ஒவ்வொரு போத்திலிலும் என்ன குடிவகையென்றும், செய்த இடம் எந்தஇடமென்றும், செய்கிறதலத்தின் ஆளுடைய அல்லது சாய்ப்பினுடைய பெயரென்னவென்றும், செய்கிற இயந்திரசாலைக்குச் சங்கத்தலைவரால் கொடுக்கப்பட்ட நொம்பர் என்னவென்றும் தெரிவிக்கக்கூடியதாய் ஒரு லேபல் ஒட்டியிருக்கவேண்டும்.

9. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட அல்லது கரப்பன் வியாதியுள்ள அல்லது தொற்று வியாதியுள்ள ஆட்கள் ஒருவரையும் சோடா லெமனெற்றையும் அதைப்போன்ற மற்றக்குடிவகைகளையும் செய்கிற சாலையில் வேலைக்கு வைக்கப்படாது.

10. சோடா லெமனெற்றையும் அதைப்போன்ற] மற்றுங் குடிவகைகளையும் போத்திலிலடைக்கும் வேலையை நடத்தும் எல்லா ஆட்களும் முகத்துக்கு இரும்பு வலையும் கைகளுக்குத் தோற்கை மேசும் போட்டிருக்க வேண்டும்.

11. சோடா லெமனெற்றும் அதைப்போன்ற மற்றுங் குடிவகைகளும் செய்யப்படுகிற அல்லது அவைகளை விற்கிறதற்கு வைத்திருக்கிற.எந்த இடமாவது திறந்திருக்கும் நேரத்தில் அவ்விடத்தில் புகுந்து அங்கே செய்யப்பட்ட அல்லது விற்கிறதற்கு வைக்கப்பட்டிருக்கிற சோடா லெமனெற்றிலும் அதைப்போன்ற மற்றுங் குடிவகைகளிலும் எந்த மாதிரியிலாவது மாதிரிப் போத்திலொன்று எடுக்கிறதற்கு மெடிக்கல் ஆபீசருக்கு அல்லது லோக்கல் போட் சக்கிடுத்தார் அல்லது இன்ஸ்பெக்றருக்கு நீதியுள்ளதாயிருக்கும். அப்படி மாதிரிப் போத்தில் கொடுக்க மறுக்கும் அவ்விடத்திலிருக்கிற சொந்தக்காரனாவது அல்லது அவ்விடத்துக்குப் பொறுப்பாளியாயிருப்பராவது குற்றத்துக்குப் பாத்திரராவார்.

---

1898 ம் ஆண்டின் சுகாதார சங்கங்களைப்பற்றிய கட்டளைச் சட்டம்.

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்கச், சுகாதார சங்கங்களைப்பற்றிய சட்டத்தின் 56 ம் பிரிவின் 21 ம் கீழ்ப்பிரிவுக்கமைய கம்பளைச் சுகாதார சங்கத்தாரால் செய்யப்பட்ட பின்வருந் துணைப்பிரமாணம், அதியுத்தம தேசாதிபதி யவர்களால் அதிகார மந்திரசபையாரின் ஆலோசனையோடு பெலப்படுத்தப்பட்டு, சகலரு மறியும்படிக்கு இத்தால் பிரசுரஞ் செய்யப்படுகின்றது.

உத்தமனார் கட்டளைப்படி,

கொழும்பு, கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
1918 ம் ஆண்டு தை௴ 8 ந் ௳.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

துணைப்பிரமாணம்.

தெருக்களில் பிரசங்கஞ் செய்யவும்படாது அல்லது கூட்டங்கள் வைக்கம்படாது.—சுகாதாரசங்கத் தலைவரிடமிருந்து அல்லது பொலீஸ் சுப்பெரின்ரெண்டெரிடமிருந்து உத்தரவு பெற்றாலொழிய, அதுவும் அவ்வுத்தரவில் சொல்லிய நேரங்கள் எல்லைகளுக்குள் ளல்லாமல், கம்பளைச் சுகாதாரசங்க எல்லைகளுக்குள் எந்தத் தெருவிலாவது ஒருவரும் சனக்கூட்டத்துக்கு பிரசங்கஞ்செய்யவும்படாது, அல்லது போதிக்கவும்படாது. இத்துணைப்பிரமாணத்தை மீறி நடப்பவர்கள் குற்றவாளிகளாய்க் காணப்பட்டு, இருபது ரூபாவுக்கு மேற்படாத அபராதத்துக் குள்ளாவர்கள்.

---

1898 ம் ஆண்டின் சுகாதார சங்கங்களைப்பற்றிய கட்டளைச் சட்டம்.

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சுகாதார சங்கங்களைப்பற்றிய சட்டத்தின் 56 ம் பிரிவின் 21 ம் கீழ்ப் பிரிவுக்கமைய நாவலப்பிட்டி சுகாதார சங்கத்தாரால் செய்யப்பட்ட பின்வரும் துணைப்பிரமாணம், அதியுத்தம தேசாதிபதி யவர்களால்] அதிகாரமந்திரசபையாரின் ஆலோசனையோடு பெலப்படுத்தப்பட்டு, சகலரு மறியும்படிக்கு இத்தால் பிரசுரஞ் செய்யப்படுகின்றது.

உத்தமனார் கட்டளைப்படி,

கொழும்பு, கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
1918 ம் ௵ தை௴ 8 ந் ௳.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

துணைப்பிரமாணம்.

தெருக்களில் பிரசங்கஞ்செய்யவும்படாது அல்லது கூட்டங்கள் வைக்கவும்படாது.—சுகாதார சங்கத் தலைவரிடமிருந்து அல்லது பொலீஸ் சுப்பெரின்ரெண்டெரிடமிருந்து உத்தரவு பெற்றாலொழிய, அதுவும் அவ்வுத்தரவில் சொல்லிய நேரங்கள் எல்லைகளுக்குள் ளல்லாமல், நாவலப்பிட்டிச் சுகாதார சங்க எல்லைக்குள் எந்தத் தெருவிலாவது ஒருவரும் சனக்கூட்டத்துக்கு பிரசங்கம்செய்யவும்படாது, அல்லது போதிக்கவும்படாது. இத்துணைப் பிரமாணத்தை மீறிநடப்பவர்கள் குற்றவாளிகளாய்க் காணப்பட்டு, இருபது ரூபாவுக்கு மேற்படாத அபராதத்துக்குள்ளாவர்கள்.

---

1898 ம் ஆண்டின் சுகாதார சங்கங்களைப்பற்றிய கட்டளைச் சட்டம்.

1918 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சுகாதார சங்கங்களைப்பற்றிய சட்டத்தின் 56 ம் பிரிவின் 21 ம் கீழ்பிரிவுக்கமைய தொப்பிதோட்ட டிக்கோயா சுகாதார சங்கத்தாரால் செய்யப்பட்ட பின்வருந் துணைப்பிரமாணம், அதியுத்தம தேசாதிபதியவர்களால் அதிகாரமந்திர சபையாரின் ஆலோசனையோடு பெலப்படுத்தப்பட்டு, சகலருமறியும்படிக்கு இத்தால் பிரசுரஞ் செய்யப்படுகின்றது.

உத்தமனாரது கட்டளைப்படி,

கொழும்பு, கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
1918 ம் ௵ தை௴ 8 ந் ௳.

ஆர். ஈ. ஸ்றப்ஸ்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

துணைப்பிரமாணம்.

தெருக்களில் பிரசங்கஞ்செய்யவும் படாது அல்லது கூட்டங்கள் வைக்கவும்படாது.—சுகாதாரசங்கத் தலைவரிடமிருந்து அல்லது பொலிஸ் சுப்பெரின்ரெண்டரிடமிருந்து உத்தரவுபெற்றாலொழிய, அதுவும் அவ்வுத்தரவில் சொல்லிய நேரங்கள் எல்லைகளுக்குள் ளல்லாமல், தொப்பிதோட்ட-டிக்கோயா சுகாதார சங்க எல்லைகளுக்குள் எந்தத் தெருவிலாவது ஒருவரும் சனக்கூட்டத்துக்கு பிரசங்கஞ்செய்யவும்படாது, அல்லது போதிக்கவும்படாது. இத்துணைப்பிரமாணத்தை மீறிநடப்பவர்கள் குற்றவாளிகளாய்க் காணப்பட்டு, இருபது ரூபாவுக்கு மேற்படாத அபராதத்துக்குள்ளாவார்கள்.

உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 6,738, கொழும்பு.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ஸ்ரு (ஜனவரி) தைமீ 11 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கச்சேரியில் கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் அல்லது எழுத்து மூலமாகத் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணி உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணி முடிக்குரியஎன அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

டபுள்யு. கே. எச். கைம்பல்,
கொழும்பு, நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசன்று.

சொல்லப்பட்ட நிலத்தின் விவரம்.

மேல் மாகாணம் கொழும்பு டிஸ்திறிக் சியானிக் கோறளை மேற்கு மெடபற்று கண்டுமுல்லா கிராமத்திலிருக்கும், அணைத்திருக்கும் படப்பிரதியில்*. காட்டியபடி கீழ்க்குறிக்கும் காணித்துண்டு :—

பிரதமபட இலக்கம் 16,190.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப. |
|---|---|---|
| 1 | இம்புல்ககவத்த | 0 0 24 |

எல்லைகளாவன: வடக்கு-151,163 ம் இலக்க உருமைப்படத்தில் காட்டிய நிலம்; தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு-முடிக்குரிய இம்புல்ககலந்த.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 5 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 6,739, கொழும்பு.]

1897 ம், 1899 ம், 1900 ம் 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச்சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தை யுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ஸ்ரு (ஜனவரி) தைமீ 11 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கந்தோரில் மேல் மாகாணம் கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவைகள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. கே. எச். கைம்பல்,
கொழும்பு, நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசன்று.

சொல்லப்பட்ட நிலங்களின் விவரம்.

மேல் மாகாணம் கொழும்பு டிஸ்திறிக் கேவகம்கோறளை உடுகஹபற்று அவிசாவலை கிராமத்திலிருக்கும் அணைத்திருக்கும் படப்பிரதியில்* காட்டியபடி கீழ்க் குறிக்கும் காணித்துண்டுகள் :—

பிரதமபட இலக்கம் 16,067.

| துண்டு. | நிலத்தின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 11 | கொற்றகெதலந்த (சவக்காலைக்காக சேமிக்கப்பட்டது) | 2 0 0 |
| 12 | கொற்றகெதலந்த (அம்மை ஆசுபத்திரிக்காக சேமிக்கப்பட்டது) | 0 2 3 |
| 13 | கொற்றகெதலந்த (றோட்டுக்காக சேமிக்கப்பட்டது) | 1 0 6 |
| 14 | கொற்றகெதலந்த | 21 1 33·62 |
| 15 | ஷை (இஞ்சினீர் கந்தோருக்காக சேமிக்கப்பட்டது) | 1 3 32 |
| | | 26 3 34·62 |

எல்லைகளாவன: வடகிழக்கு-றயில்வே நிலம்; கிழக்கு-ரத்தினபுரியிலிருந்து அவிசாவலைக்கு போகும் றயில்பாதை; தெற்கு-81,203 ம் உரிமைப்படத்தில் காட்டிய நிலமும், சி. சே. ஏ. மாசலால் உருத்தாடப்பட்ட கொட்டகெதலந்தவும், 81,203 ம் உரிமைப்படத்தில் காட்டிய நிலமும்; தென்மேற்கு-274,316 ம் உரிமைப்படத்தில் காட்டிய நிலல்; மேற்கு-274,316 ம் உரிமைப்படத்தில் காட்டிய நிலமும், முடிக்குச்சேர்ந்த கொட்டகெதலந்தவும்; வடமேற்கு-114,785 ம் உரிமைப்படத்தில் காட்டிய நிலம்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 6 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 6,740, கொழும்பு.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ஸ்ரு (ஜனவரி) தைமீ 11 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கந்தோரில் மேல்மாகாணம் கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவர்கள் முடிக்குரியஎன அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

டபுள்சு. கே. எச். கைம்பல்,
கொழும்பு, நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட நிலங்களின் விவரம்.

மேல் மாகாணம் கொளும்பு டிஸ்திறிக் கேவகம்கோறளே உடுகஹபற்று எலமலவல என்னும் கிராமத்திலிருக்கும், அணைத்திருக்கும் படப்பிரதியில் *காட்டியபடி கீழ்க்குறிக்குங் காணித் துண்டுகள் :—

பகுதி 1.—துண்டாயளந்த பிரதமபட இலக்கம் 63.

| துண்டு. | | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 2 | .. | அலுபொக்கடேனியா .. .. .. .. | 0 0 15 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்காக சேமிக்கப்பட்ட அலுபொககலந்த; கிழக்கும் வடகிழக்கும்-முடிக்குச்சேர்ந்த காடாகிய கொரககலந்த; தெற்கு-227,594 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலம்; மேற்கு-கமலாச்சாகே பெம்பியால் உருத்தாடப்பட்ட கொறக்கலந்தவலை.

பகுதி 2.

| துண்டு. | | நிலத்தின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 4 | .. | லவலுககவத்த .. .. .. .. | 0 0 32 |
| 5 | .. | ஷை .. .. .. .. | 0 2 14 |
| 6 | .. | அலுபொககலந்த .. .. .. .. | 1 0 34 |
| | | | 2 0 0 |

எல்லைகளாவன: வடக்கு-227,589 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலமும், அம்பககடே ஆறுவும், முடிக்குச்சேந்த காடும், 239,534 ம் உருமைப்படத்தில் காட்டிய நிலமும்; கிழக்கும் தென்கிழக்கும்-முடிக்குச்சேந்த காடாகிய கொறககலந்த; தெற்கு-தண்ணீர் வாய்க்கால்; மேற்கு-எலமலவலவிலிருக்கும் கமலாச்சாகே சிஞ்சிநோனுவுக்காக தீர்க்கப்பட்ட லவலுககவத்தவும் தண்ணீர் வாய்க்காலும்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 7 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

[அறிவித்தல் இல. 6,741 புத்தளம்.]

**1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.**

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியில் ஏதும் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1918 ம் ௵ (ஜனவரி) தைமீ 11 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே புத்தளங் கச்சேரியில் வடமேல் மாகாணம், புத்தளம் சலாபம் திஸ்திறிக்குகளின் உப அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சமுகமாய் வந்து அல்லது எழுத்துமூலமாக சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணிகள் உப அரசாட்சி ஏசன்று அவர்களுக்கு 1897 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவெய்ற்,
புத்தளம், சலாபம் டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட காணிகள் விவரம்.

வடமேல் மாகாணம் சிலாபந் திஸ்திரிக்கு பிற்றிகள் கோறளே பளுவெல்காலேயென்னும் ஊரில் இருக்கும் இதற்கணைத்த படத்தில்* விபரிக்கப்பட்ட காணி:—

பிளான் இலக்கம் 4,787.

| துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 2 | .. | தெவட்டகஹகெலே .. .. .. .. | 2 1 24 |
| 3 | .. | கன்சபாவை பாற (பாதை) .. .. .. .. | 0 1 26 |
| 4 | .. | தெவட்டகஹகெலே .. .. .. .. | 3 3 29 |
| | | | 6 2 39 |

எல்லைகள்: வடக்கு-கஹட்டகஹவத்த என்னும், ஏ. கறணிசாஹேனயாவுடைய உரித்தாளிகள் பிடித்துக்கொண்டிருக்கும் முடிக்குரிய காணி; கிழக்கு-88 445 ம் நம்பர்கொண்ட உருத்து பிளானில் விபரிக்கப்பட்ட காணியும் கச்சிநாவைக்குப் போகும் வழியும்; தெற்கு-88,452 ம் 88,449 ம் பிளானுகளில் விபரிக்கப்பட்ட காணிகளும், குறுகெப்பெட்டியாவத்த என்னும் மாதம்பை அண்ணமலைச் செட்டி பிடித்துக்கொண்டிருக்கும் முடிக்குரிய காணி; மேற்கு-88,446 ம் நம்பர் கொண்ட பிளானில் காணும் காணியும் கொட்டருமுள்ளையிலிருந்து எப்பாவெலவுக்குப் போகும் வழியும்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 8 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்குக.

H. C COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.